
# EMIS_ STUDENTS PROMOTION- STEPS

## எமிஸ் தளத்தில் தேர்ச்சி வழங்குவதற்கான பொதுவான வழிமுறைகள்


➢ முதலில் பள்ளியில் இறுதி வகுப்பு ( **மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு/ உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு / நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு / துவக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு**) பயின்ற மாணவர்களது விபரங்கள் மற்றும் பள்ளி மாறுதல் காரணமாக மாற்றுச் சான்றிதழ் கோரிய இதர வகுப்பு மாணவர்களது விபரங்கள் மாற்றுச் சான்றிதழ் தயார் செய்யப்பட்டு, **common pool**க்கு அனுப்பப்பட்டு இருக்க வேண்டும்.

➢ மேற்கண்ட பணி முடிக்கப்பட்டதை உறுதி செய்த பின்பு, பள்ளியின் எமிஸ் தளத்தில் **schools --> class and sections** வாயிலாக தங்கள் பள்ளியில் உள்ள அனைத்து வகுப்புகள் / பிரிவுகள் சரியாக உள்ளதையும், ஒவ்வொரு வகுப்பு பிரிவிற்கான **medium (for all classes) & group code (only for higher secondary)** சரியாக உள்ளதையும் கட்டாயம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வலது புற மேல் பக்கத்தில் உள்ள **+ Add** **option** வாயிலாக தேவைப்படின் புதிய பிரிவுகளை (**sections**) உருவாக்கிக்கொள்ளலாம்.




➢ எமிஸ் தளத்தில் தேர்ச்சி வழங்கும் போது இறங்கு வரிசைமுறையில் (**11,9,8,7,6,5,4,3,2,1,UKG,LKG**) வகுப்புகளைத் தேர்வு செய்து தேர்ச்சி வழங்குதல் வேண்டும்.


➢ அதற்கு பள்ளியின் எமிஸ் தளத்தில் **Students--> Students promote** வாயிலாக தங்கள் பள்ளி மாணவர்களுக்கு கீழ்க்கண்ட படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வகுப்பு/ பிரிவினைத் தேர்வு செய்து, **Get Student List** மூலம் மாணவர்களின் பெயர் பட்டியலை பெற்றவுடன், அம் மாணவர்களுக்கு தேர்ச்சி அளிக்கப்படும் **அடுத்த உயர் வகுப்பு பிரிவினை தேர்வு** செய்து **»** என்பதை கிளிக் செய்தவுடன் மாணவர்களது பெயர்கள் அடுத்த உயர் வகுப்பு/பிரிவிற்கான பட்டியலில் தோன்றும், அதனைத் தொடர்ந்து **promote** என்பதை தேர்வு செய்தபின் **Are you sure you want to promote _ Students?** என்ற வினாவிற்கு **yes** என தேர்வு செய்வதன் மூலம் குறிப்பிட்ட வகுப்பு பிரிவிற்கு தேர்ச்சி வழங்கும் பணியானது நிறைவுபெறும்.






- ஒரு வகுப்பு பிரிவிற்கான தேர்ச்சி வழங்கும் பணியை முடித்த உடன் **ctrl+shift+R** என்பதை கிளிக் செய்து அப்பக்கத்தினை **refresh** செய்து கொள்ளுதல் வேண்டும். இதே வழிமுறையை பின்பற்றி ஏனைய பிற வகுப்பு/பிரிவிற்கும் தேர்ச்சி வழங்குதல் வேண்டும்.

- **ஒரு வகுப்பு/ பிரிவில் உள்ள மாணவர்களை** அடுத்த உயர் வகுப்பு தேர்ச்சி அளிக்கும்போது **இரு வெவ்வேறு பிரிவுகளுக்கு தேர்ச்சி அளிக்க வேண்டி இருப்பின்**, முதலில் உதாரணமாக 'B' பிரிவிற்கு தேர்ச்சி அளிக்கவேண்டிய மாணவர்களது பெயர்களை மட்டும் கீழ்க்காணும் படத்தில் தேர்வு செய்துள்ளதைப் போன்று தேர்வு செய்தபின், தேர்ச்சி அளிக்க வேண்டிய அடுத்த உயர் வகுப்பு பிரிவினை VI B பூர்த்தி செய்து > என்பதை கிளிக் செய்தவுடன் மாணவர்களது பெயர்கள் அடுத்த உயர் வகுப்பு/பிரிவிற்கான பட்டியலில் தோன்றும், பின்பு **promote** என்பதை தேர்வு செய்து தேர்ச்சி அளிக்கலாம். இதே வழிமுறையைப்பின்பற்றி **தேவையான** பிரிவிற்கு தேர்ச்சி அளிக்கலாம்.




- மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்கும் பணி முடிக்கப்பட்டபின்பு **schools -->class and sections**ல் மாணவர்கள் பதிவு இன்றி ஏதேனும் பிரிவுகள் (**sections**) இருப்பின் அதனை **delete** செய்திடல் வேண்டும்.

## மேல்நிலைப்பள்ளிகளில் (Higher secondary schools),

Step 1: கடந்த கல்வியாண்டில் (2019-2020) **பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு** பயின்ற மாணவர்களுக்கு எமிஸ் தளத்தில் மாற்றுச் சான்றிதழ் தயார் செய்து, **அம்மாணவர்களது விபரங்களை common poolற்கு அனுப்பிய பின்பே**, (அதாவது EMIS School loginல் 10,12ஆம் வகுப்புகளில் எந்த ஒரு மாணவரது பதிவும் இருத்தல் கூடாது) / **மற்ற வகுப்புகளில் மாற்றுச் சான்றிதழ் கோரும்** பெற்றோரின் கோரிக்கைக்கிணங்க மாற்றுச் சான்றிதழ்களை எமிஸ் இணையதளம் வாயிலாக தயார் செய்து வழங்கிய பின்பே, promotion வழங்கும் பணியை தொடங்குதல் வேண்டும்.

Step 2: கடந்த கல்வியாண்டில் 11ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.

Step 3: கடந்த கல்வியாண்டில் 9ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.

Step 4: கடந்த கல்வியாண்டில் 8ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் 7ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 6: கடந்த கல்வியாண்டில் 6ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.

### உயர்நிலைப்பள்ளிகளில் (high schools),

Step 1: கடந்த கல்வியாண்டில் (2019-2020) **பத்தாம் வகுப்பு** பயின்ற மாணவர்களுக்கு எமிஸ் தளத்தில் மாற்றுச் சான்றிதழ் தயார் செய்து, **அம்மாணவர்களது விபரங்களை common poolற்கு அனுப்பிய பின்பே**, (அதாவது EMIS School loginல் 10ஆம் வகுப்புகளில் எந்த ஒரு மாணவரது பதிவும் இருத்தல் கூடாது) / **மற்ற வகுப்புகளில் மாற்றுச் சான்றிதழ் கோரும்** பெற்றோரின் கோரிக்கைக்கிணங்க மாற்றுச் சான்றிதழ்களை எமிஸ் இணையதளம் வாயிலாக **தயார் செய்து வழங்கிய பின்பே**, promotion வழங்கும் பணியை தொடங்குதல் வேண்டும்.

Step 2: கடந்த கல்வியாண்டில் 9ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 3: கடந்த கல்வியாண்டில் 8ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 4: கடந்த கல்வியாண்டில் 7ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் 6ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.

### நடுநிலைப்பள்ளிகளில் (Middle schools),

Step 1: கடந்த கல்வியாண்டில் (2019-2020) **எட்டாம் வகுப்பு** பயின்ற மாணவர்களுக்கு எமிஸ் தளத்தில் மாற்றுச் சான்றிதழ் தயார் செய்து, **அம்மாணவர்களது விபரங்களை common poolற்கு அனுப்பிய பின்பே**, (அதாவது EMIS School loginல் 8ஆம் வகுப்புகளில் எந்த ஒரு மாணவரது பதிவும் இருத்தல் கூடாது) / **மற்ற வகுப்புகளில் மாற்றுச் சான்றிதழ் கோரும்** பெற்றோரின் கோரிக்கைக்கிணங்க மாற்றுச் சான்றிதழ்களை எமிஸ் இணையதளம் வாயிலாக **தயார் செய்து வழங்கிய பின்பே**, promotion வழங்கும் பணியை தொடங்குதல் வேண்டும்.

Step 2: கடந்த கல்வியாண்டில் 7ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 3: கடந்த கல்வியாண்டில் 6ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 4: கடந்த கல்வியாண்டில் 5ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் 4ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் 3ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் 2ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் 1ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் UKG வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் LKG வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.

### தொடக்கப்பள்ளிகளில் (Primary schools),


Step 1: கடந்த கல்வியாண்டில் (2019-2020) **ஐந்தாம் வகுப்பு** பயின்ற மாணவர்களுக்கு எமிஸ் தளத்தில் மாற்றுச் சான்றிதழ் தயார் செய்து, **அம்மாணவர்களது விபரங்களை common poolற்கு அனுப்பிய பின்பே**, (அதாவது EMIS School loginல் 5ஆம் வகுப்புகளில் எந்த ஒரு மாணவரது பதிவும் இருத்தல் கூடாது) / **மற்ற வகுப்புகளில் மாற்றுச் சான்றிதழ் கோரும்** பெற்றோரின் கோரிக்கைக்கிணங்க மாற்றுச் சான்றிதழ்களை எமிஸ் இணையதளம் வாயிலாக **தயார் செய்து வழங்கிய பின்பே**, promotion வழங்கும் பணியை தொடங்குதல் வேண்டும்.

Step 2: கடந்த கல்வியாண்டில் 4ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 3: கடந்த கல்வியாண்டில் 3ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 4: கடந்த கல்வியாண்டில் 2ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.
Step 5: கடந்த கல்வியாண்டில் 1ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு தேர்ச்சி வழங்குதல்.

# EMIS_STUDENTS ADMISSION- STEPS


அனைத்து வகைப்பள்ளிகளிலிலும், **தேர்ச்சி (Promotion to next class) வழங்கும் பணிகளை அனைத்து வகுப்புகளுக்கும் முடித்த பின்பே**, இக்கல்வியாண்டில் (2020-21) தங்களது பள்ளியில் புதிதாக சேர்க்கை செய்யப்பட்டுள்ள மாணவர்களது விபரங்களை எமிஸ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.


- இக்கல்வியாண்டில் தங்கள் பள்ளியில் புதிதாக சேர்க்கை (**New Admission**) செய்யப்பட்ட மாணவர்களில், **LKG/1 ஆம் வகுப்பில்** சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே எமிஸ் தளத்தில் **Students → students admission → Has the student studied in any other school in tamil nadu ?** என்பதற்கு No என தேர்வு செய்து, மாணவனது Personal information, Family details, Communication details, Academic info போன்ற விபரங்களை உள்ளீடு செய்து **New entry** செய்து கொள்ளலாம்.




- தவிர வேறு மாநிலங்களிலிருந்து பள்ளியில் சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களுக்கு **LKG/முதல் வகுப்பில் New entry செய்தபின்**, **Students → students list**ல் சார்ந்த மாணவனது **profile(Academic Information)**ல் சரியான வகுப்பினை பதிவு செய்வதன் மூலம் எமிஸ் பதிவினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

- இவற்றைத் தவிர UKG, 2 வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பள்ளியில் சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களுக்கு **Students → students admission → Has the student studied in any other school in tamil nadu ?**, Yes என தேர்வு செய்து, அம்மாணவனது EMIS number/ Adhaar number/ phone number/ Previous school u-dise code/ DOB போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை பதிவு செய்து Search செய்வதன் மூலம் common poolல் உள்ள மாணவர்களது விபரங்களை தங்கள் பள்ளியில் சேர்க்கை ✔ Admit செய்து கொள்ளவேண்டும்.






- நாளதுவரை பள்ளியில் சேர்க்கை செய்யப்பட்ட அனைத்து மாணவர்களது விபரங்களையும் தவறாமல் எமிஸ் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.